# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2018.09.28 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# தேயிலை ஆராய்ச்சி சபை (திருத்தம்)

***1993 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, தேயிலை ஆராய்ச்சி சபை சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *12.00*** | **தபாற் செலவு : ரூபா *15.00***

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சட்டப்பயன்பற்றிய கூற்று

**வாசகம் 2 :** இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1993 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, தேயிலை ஆராய்ச்சி சபை சட்டத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, சூழல்சார் பாதுகாப்புகளை உள்ளடக்குவதன்மூலம் சபையின் பணிகளை விசாலிப்பதற்கும் எவர்களுக்கு ஆராய்ச்சிப் பெறுபேறுகள் பரப்பப்படுமோ அவர்களைக் குறித்துரைப்பதற்குமாகும்.

**வாசகம் 3 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, வேறு தொடர்புபட்ட சட்டங்களுடனான ஒவ்வாமைக்காக ஏற்பாடு செய்வதற்காகும்.

**வாசகம் 4 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, சபையின் அமைப்பை மீள்கட்டமைப்பதற்காகும்.

**தேயிலை ஆராய்ச்சி சபை**
**(திருத்தம்)**

*ச.வ. - ஓ. 22/2014*

### *1993 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, தேயிலை ஆராய்ச்சி சபை சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

***1.*** *இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின்        ஆம் இலக்க, தேயிலை ஆராய்ச்சி சபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.* *சுருக்கப் பெயர்.*

***2.*** *(இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1993 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, தேயிலை ஆராய்ச்சி சபை சட்டத்தின் 5 ஆம் பிரிவு, அதன் (அ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-* *1993ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, தேயிலை ஆராய்ச்சி சபை சட்டத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

*"(அ) நோய்களையும் பீடைகளையும் தடுத்தல், கட்டுப்படுத்துதல், தேயிலை நிலங்களின் மண்ணைப் பேணிக்காத்தல், பயன்படுத்தப்பட்ட உரத்தின் தரம், தேயிலை நடுகைப் பொருட்களின் தரத்தைப் பேணுதல், காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை மதிப்பீடு செய்தல் மற்றும் கையாளுதல் மற்றும் தேயிலைத் தயாரிப்பைப் பன்முகப்படுத்தல் உட்பட, தேயிலை தயாரிப்பு மற்றும் உற்பத்தி பற்றிய எல்லாக் கருமங்களும் தொடர்பாக அறிவியல்சார் மற்றும் தொழில்நுட்பவியல்சார் ஆராய்ச்சி மற்றும் நுண்ணாய்வை நடாத்துதல், நடாத்த உதவுதல் மற்றும் ஊக்குவித்தல் மற்றும் 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தேயிலை சிறுபற்றுநிலங்கள் அபிவிருத்திச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேயிலை சிறுபற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபை, தேயிலை சிறுபற்று நிலக்காரர்கள், பெரியளவிலான தோட்டத்துறை மற்றும் அக்கறை கொண்டுள்ளோர்களுக்கு அத்தகைய ஆராய்ச்சியின் முடிவுகளை அதனது தற்றுணிபில் பரப்புதலும் வெளியீடு செய்தலும்;".*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (ஒ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(ஓ) (i) 1999 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தாவரப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கமத்தொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளருக்கு வழங்கப்பட்ட தாவர இறக்குமதி அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின்கீழ் தவிர, ஏதேனும் தேயிலை நடுகைப் பொருளின் இறக்குமதியைத் தடுத்தலும் மற்றும் ஏற்றுமதியின் விடயத்தில், இறக்குமதி செய்யும் நாட்டின் வேண்டுகோளின் பேரில் தாவர சுகாதாரப் பாதுகாப்புச் சான்றிதழொன்றை வழங்குதலும்;

(ii) இப்பந்தியின் நோக்கத்திற்காக, "தேயிலை நடுகைப் பொருள்" என்பது, வெட்டுகைகள், தண்டுகள், ஒட்டுமுளைகள், அடிமரக் கட்டைகள், விதைகள், பரிசோதனைக்குழாய் வளர்ப்புகள் (நுண் இனப் பெருக்க முளைகள்) போன்ற இனப் பெருக்க முளைகளை நேரடியாகப் பயன்படுத்தப்படக்கூடிய ஏதேனும் வகையிலான நடுகைப் பொருள் அல்லது எவ்வகையினதுமான உடல் கூற்று அல்லது இனப் பெருக்க இழையங்கள், அங்கங்கள் போன்ற நேரடியாகவல்லாமல் தாவரங்களை உற்பத்தி செய்வதற்கு மீளாக்கப்படக் கூடிய ஏதேனும் வகையிலான நடுகைப் பொருள் மற்றும் இனப் பெருக்கத்திற்காக பயன்படுத்தக்கூடிய ஏதேனும் தேயிலைத் தாவரத்தின் ஏதேனும் உயிருள்ள பாகத்திலிருந்து மூலவுயிருக்கு, சீராக்கப்பட்ட இனங்கள், பயிரிட்டவைகள்,

தேயிலையின் வான் வகைகள் என்பவற்றையும் உள்ளடக்கும் ;"; அத்துடன்

(2) (ஓ), (ஔ), (க), (ங) மற்றும் (ச) என்னும் பந்திகளை முறையே (ஔ), (க), (ங), (ச) மற்றும் (ஞ) என்னும் பந்திகளாக மீள இலக்கமிடுவதன் மூலமும்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப் படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

" (ஆ) அமைச்சினால் நியமிக்கப்பட்ட பின்வரும் நியமன உறுப்பினர்கள் ; அதாவது :-

(i) பெருந்தோட்டத் தொழில்கள் என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ, அந்த அமைச்சரின் அமைச்சைச் சேர்ந்தவரும், அந்த அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவருமான பிரதிநிதி ஒருவர்;

(ii) நிதி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ, அந்த அமைச்சரின் அமைச்சைச் சேர்ந்தவரும், சிரேட்ட உதவிச் செயலாளர் பதவி வரிசைக்குக் குறையாத பதவி வரிசையில் உள்ளவரும், அவ்வமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவருமான பிரதிநிதி ஒருவர்;

(iii) 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலை சபை சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை தேயிலை சபையைச் சேர்ந்தவரும், அத்தகைய சபையினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவருமான பிரதிநிதி ஒருவர்;

(iv) 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தேயிலைச் சிறுபற்று நிலங்கள் அபிவிருத்திச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேயிலைச் சிறுபற்று நிலங்கள் அபிவிருத்தி அதிகார சபையைச் சேர்ந்தவரும், அத்தகைய அதிகாரசபையினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவருமான பிரதிநிதி ஒருவர்;

(v) கமத்தொழிற்துறையில் போதிய அறிவும் அனுபவமும் கொண்ட ஆட்களிடையேயிருந்து, பெருந்தோட்டத் தொழில்கள் என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ, அந்த அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் இருவர்;

(vi) (291 ஆம் அத்தியாயமான) இலங்கைப் பெருந்தோட்ட முதலாளிமார் சங்கக் கட்டளைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பெருந்தோட்ட முதலாளிமார் சங்கத்தைச் சேர்ந்தவரும், அத்தகைய சங்கத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவருமான பிரதிநிதி ஒருவர்;

(vii) பெருந்தோட்டத் தொழில்கள் என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ, அந்த அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டளைக்கற்களின் மீது தெரிவு செய்யப்பட வேண்டியவர்களும், தொழிற் சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றவர்களுமான உறுப்பினர்கள் இருவர்:

இந்த உப்பந்தியின் நோக்கத்திற்காக, "தொழிற் சங்கம்" என்பது (138 ஆம் அத்தியாயமான) தொழிற்சங்கக் கட்டளைச் சட்டத்தில் உள்ளதைப் போன்ற அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(viii) 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தேயிலைச் சிறுபற்று நிலங்கள் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை தேயிலை சிறுபற்று நிலங்கள் அபிவிருத்திச் சங்கங்கள் சம்மேளனத்தின் பிரதிநிதி ஒருவர் ; அத்துடன்

(ix) இலங்கை தேயிலை தொழிற்சாலைச் சொந்தக்காரர்கள் கழகத்தைச் சேர்ந்தவரும், அக்கழகத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவருமான பிரதிநிதி ஒருவர்.".

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்.